# விபஸ்ஸனா

## செய்தி மடல்

(விபஸ்ஸனா : ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை)

(தொகுப்பு 31 எண் 4 , ஏப்ரல் 27, 2021 ).

விபாசனா ஆராய்ச்சி நிறுவனத்தின் மாதாந்திர பிரசுரம்

வலை தளம் www.vridhamma.org பன்னாட்டு வலை தளம் www.dhamma.org

விபாசனா செய்திமடலின் சிறப்பு ஆன்-லைன் பதிப்பு.


---

## தம்மா பொன்மொழிகள்

**யோ ச பூத்தஞ்ச தம்மஞ்ச, ஸங்கஞ்ச ஸரணம் கதோ**

**சத்தாரி அரியஸச்சாணி, ஸம்மப்பஞ்ஞாய பஸ்ஸதி**

**துக்கம் துக்கஸபூப்பாதம், துக்கஸ்ஸ ச அதிக்கமம்**

**அரியம் சட்டங்கிகம் மக்கம் துக்கபஸமகாமினம்**

**ஏதம் கோ ஸரணம் கேமம், ஏதம் ஸரணமுத்தமம்**

**ஏதம் ஸரணமாகம்ம, ஸப்பதுக்கா பமுச்சத**

-------- தம்ம்பதபாளி 190,191,192 புத்தவக்கோ

புத்தர் தம்மம் மற்றும் சங்காவிடம் சரணடைந்த ஒருவர் - துன்பம், துன்பத்தின் எழுச்சி, அதிலிருந்து வெளியே வருதல், அதிலிருந்து வெளியே வர 8 மடங்கு உன்னதமான பாதையின் புரிதல் - என்ற நான்கு உன்னத சத்தியங்களை புரிந்து கொண்டவர் -

இது மிகச் சிறந்த சரணடைதல் மற்றும் மிக உயர்ந்த நலனைக் கொடுக்கும் சரணடைதல் என தனது பன்னாவுடன் அறிவார். அவ்விதம் சரணடைவதன் மூலம், ஒருவர் எல்லா துன்பங்களிலிருந்தும் விடுபடுகிறார்.



இந்த வணக்கங்கள், பிரசாதங்கள் மற்றும் கௌரவங்கள் அனைத்தும் தம்மத்திற்குரியது. தம்மாவினால் மனிதன் மதிப்பு பெறுகிறான். தம்மா இல்லா நபருக்கு எந்த மதிப்பும் இல்லை.

- கல்யாணமிட்டா
எஸ்.என்.கோயங்கா

இந்திய அரசு, 2012 இல், கோயங்காஜியை பத்மா பூஷன் எனும் உயரிய விருது அளித்து அலங்கரித்தது. (சமூகத்திற்கு அளித்த பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் வழங்கப்பட்ட உயர் சிவில் விருது.) கோயங்காஜிக்கு டெல்லிக்கு செல்ல இயலவில்லை. எனவே அதற்கு மாநில அரசாங்கத்தைச் சேர்ந்த ஒரு அதிகாரி அவரது வீட்டிற்கு அனுப்பப்பட்டார். அவருக்கு விருது வழங்கும்

புகைப்படமே மேலே காண்பிக்கப்பட்டுள்ளது. அவரது மகன்களான ஸ்ரீ பன்வரிலால்ஜி மற்றும் ஸ்ரீ பிரகாஷ்ஜி பின்னால் நிற்கிறார்கள்.

# விபாசனாவின் பொன்விழாவில் (50 வது ஆண்டுவிழா) ஆற்றும் பேருரை

16 டிசம்பர், 2019

தம்ம சகோதர சகோதரிகளே!

இன்று இந்தியாவில் விபாசனா தொடங்கி 50 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறோம். இந்த பொன்விழா கொண்டாட்டத்தின் போது விபாசனா தொடர்ந்து வரும் நூற்றாண்டுகளில் மக்களுக்கு தொடர்ந்து பயனளிப்பதாக இருக்க வேண்டும் என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும் .

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்த பாரம்பரியத்தினை தூய்மையான வடிவத்தில் நிலைபெற்று நிற்க செய்துள்ள அனைத்து ஆசிரியர்களைக் கண்டு எங்கள் இதயங்கள் பெருமிதத்துடன் நன்றியால் நிரப்புகிறது.

ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு அதன் தூய வடிவம் மாறாமல் பெற அவர்களின் ஊக்கமான முயற்சி துணைபுரிந்தது. விபாசனா இங்கே முதலில் ஆரம்பித்து இங்கே செழித்தோங்கி வளர்ந்து இங்குள்ள பல மில்லியன் மக்களுக்கு பயனளித்தது. பின்னர் கடந்த காலத்தில் அதன் தூய்மையை இழந்து விபாசனா இந்தியாவில் இருந்து மறைந்தது.

குருஜி எப்போதும் ஆசிரியர்களுக்கு அவர்கள் தன்னலமற்ற சேவை செய்வதால் அதிக முக்கியத்துவம் கொடுத்தார். இதேபோல் துறவிகள் சேவை செய்வதன் பொருட்டு அவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார்.

அவர் ஒரு தியான பயிற்சி ஏற்பாடு செய்யும் போது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறவிகள் அதில் கலந்து கொண்டால் அவர் நிச்சயமாக சங்க-தானா (நன்கொடை) ஏற்பாடு செய்வார். (புத்தரின் துறவிகளின் சமூகத்திற்காக

அவர்களுக்கு மிகுந்த மரியாதையுடன் நன்கொடைகளுக்கு ஏற்பாடு செய்தல்) அத்தகைய சங்க-தானா நிகழ்ச்சி போத் கயாவில் நடைபெற்ற போது நானும்

அதில் கலந்துகொண்டேன். குருஜி அமெரிக்கா சென்றபோது அவர் அங்குள்ள துறவிகளை அழைத்து மிகப் பெரிய அளவில் சங்க-தானாக்கு ஏற்பாடு செய்தார்.

குழந்தை பருவத்தில் (60 ஆண்டுகளுக்கு முன்பு) ஸயாஜி ஊ பா கினிடமிருந்து விபாசனாவை பயின்றேன். நான் மொத்தம் 8 வகையான நீடித்த பயிற்சிகள் மேற்கொண்டேன்.

குருஜி பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு வந்தபோது, சயகிக்கு சேவை செய்வதற்கான வாய்ப்பு எனக்கு கிடைத்தது. பல் சிகிச்சைக்கான மருத்துவரிடம் அவரை கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு நான் அழைத்துச் சென்றேன். அவரை மருத்துவரிடம் அழைத்துச் சென்று மீண்டும் தியான மையத்தில் அவரை விட்டு விட்டு பின்னர் வீடு திரும்புவேன்.

இது பல மணி நேரம் ஆனது. நான் திரும்பி வரும் நேரம் மதியம் 3 அல்லது 4 ஆக இருக்கும் இதன் காரணமாக நான் மதிய உணவு எடுத்துக்கொள்ளும் நேரம் தாமதமானது. இந்த அலைகழிப்பினால் சில நேரங்களில் பொறுமையிழந்து எரிச்சலுற்றேன்.

குருஜி இதைப் பற்றி அறிந்ததும், அவர் எனக்கு ஒரு கடிதம் எழுதினார். குருஜிக்கு சேவை செய்ய ஒரு வாய்ப்பு கிடைப்பது மிகவும் தகுதியான விஷயம். நான் அதை ஒரு நல்ல அதிர்ஷ்டமாக கருத வேண்டும். ஒரு போதும் சுமை இல்லை என்று விளக்கினார்.

இதற்குப் பிறகு எனக்கு ஒருபோதும் எரிச்சலூட்டும் உணர்வுகள் ஏற்பட்டதில்லை. நான் மிகவும் மகிழ்ச்சியாக உணர்ந்தேன்.

குருஜிக்கு இந்தி மொழி மிகவும் பிடிக்கும். இளவயது முதற்கொண்டு அவர் எழுதுதல் மற்றும் பெரிய கூட்டங்களில் உரையாற்றத் தொடங்கினார். பர்மாவில் வாழும் இந்தியர்கள் இந்தி மொழி அறிந்து இருக்க வேண்டும். என்பதற்காக அவர் மிகவும் விழிப்புடன் இருந்தார்.

எங்கள் மக்களின் கல்வி கற்பிக்கும் மொழி பர்மிய மொழியாக இருந்தது. அவர் இந்தி கற்பிப்பதற்காக இந்தி ஆசிரியர்களை பிரத்தியேகமாக வைத்திருந்தார்.

நாங்கள் இந்தி பயிலுவதில் ஒரு தவறு செய்தால் அப்போது எங்கள் ஆசிரியர் எங்களை ஒரு குடையால் அடிப்பார். எனவே "சத்ரி வேல் சாச்சா" (குடை மாமா) என மாணவர்கள் அவருக்கு பெயர் சூட்டினர்.

பெண்கள் மற்றும் சிறு குழந்தைகளுக்கு இந்தி வகுப்புகள் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன.

பர்மாவில் இந்தி புத்தகங்கள் கிடைக்காத போது, அவர் இந்தியாவில் பிரயாக் லிருந்து "இந்தி சாகித்ய சம்மலன் மற்றும் வர்தாவிருந்து “இந்தி பாஷா பிரச்சார் சமிதி” (இந்தி மொழி மேம்பாட்டுக் குழு) புத்தகங்களைப் பெறுவார்.

தேர்வின் வினாத்தாள்கள் வர்தாவிலிருந்து வரும். முதல், இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை வகுப்புகளுக்கான தேர்வுகள் நடைபெறும். அவர் எங்களை வீட்டின் ஒரு கூடத்தில் தனித்தனியாக உட்கார வைப்பார்.

தேர்வை நடத்தி பின்னர் விடைத்தாள்கள் அனைத்தும் சான்றிதழ் தருவதற்காக வர்தாவுக்கு அனுப்பபடும். அங்கிருந்து வரும் சான்றிதழ் அனைவருக்கும் கொடுக்கப்படும்.

குருஜியும் இந்தியில் நாடகங்களை எழுதி அரங்கேற்றினார். அதன் மூலம் இந்தி மொழியில் தொடர்ந்து அனைவரும் முன்னேறினர்.

அவருக்கு இந்தியா மீது ஆழ்ந்த அன்பும் அர்ப்பணிப்பும் இருந்தது. இந்தியா ஒரு நெருக்கடியை எதிர்கொண்ட போது பண்டிட் நேரு அழைப்பின் பேரில் அனைவருக்கும் உதவி செய்ய, குருஜி பர்மாவிலிருந்து இந்தியாவுக்கு ஒரு செய்தி அனுப்பினார்.

அதில் அனைத்து ஆபரணங்களும் உள்ள இல்லிச்சிதேவியின் ஆபரணங்களின் பெட்டி நாட்டின் நலனுக்காக இந்திய அரசுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டும் என்ற செய்தி இருந்தது. நாட்டின் விதிகளின்படி அவ்வாறு செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்தி ஈரடிச்செய்யுள் புனைவது குழந்தை பருவத்திலிருந்தே அவரது வழக்கம் பல ஈரடிச்செய்யுள் இந்தி மொழி மற்றும் ராஜஸ்தானிய மொழிகளில் அவரால் எழுதப்பட்டன.

அவரது குருஜிக்கு மரியாதை மற்றும் நன்றியுணர்வு வெளிப்படுத்த பல ஈரடிச்செய்யுள் இயற்றினார். குருஜி எப்போது பயிற்சி வகுப்புகளைத் தொடங்கினாலும் தனது குரு ஸயாஜியை வணங்கி, நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார். ஸயாஜிக்கு நன்றிகூறும் வரிக்கு முந்தைய வரியில் அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறார்.

குருவைப் பற்றி மனதில் பக்தி இருக்கும்போது தான் ஒருவர் தம்மத்தின் பாதையில் முன்னேற முடியும். நாமும் இந்த குணங்களை நம் வாழ்வில் ஊக்குவிக்க வேண்டும்

உங்கள் அன்றாட நடைமுறையை வலுப்படுத்துங்கள், அப்போதுதான் குருஜி மாதாஜியிடம் உள்ள நம்முடைய பயபக்தி அர்த்தமுள்ளவைகளாக இருக்கும்

குருஜியின் சில ஈரடிச்செய்யுள் நான் இங்கே நினைவு கூறுகிறேன். அவர் செயல்களையும் பேச்சையும் பற்றி இதில் குறிப்பிடுகிறார்:

**கதணீ சரல ஹை, கருணீ கரதி ஹோயா**

**கதணீ ஸி கரணீ கரை, ஸாசோ க்யானீ ஸோய**

வெறும் சொற்களைச் சொல்வது எளிதானது, உண்மையிலேயே செயல்படுவது கடினம். அவருடைய வார்த்தைகளுக்கு ஏற்ப உண்மையாக செயல்படுபவர் உண்மையான ஞானி.

**ஸாது நஹீ, ஸஜ்ஜனா நஹீ, ஸாதக ஸம்த ஸூஜான்**

**கதனீ ஸீ கரணீ கரை, வோ ஹீ ஸம்த ஸூஜான்**.

துறவியானவர் பண்புள்ளவர், தியானிக்கும் உன்னதமானவர். தனது வார்த்தைகளுக்கு ஏற்ப உண்மையாக இருந்து அதற்கேற்ப செயல்படுபவர் ஞானமுள்ள துறவி.

**கதணீ - கரணீ பிச இஸீ, தேகீ நஹீ துபாம்த**

**கவை ஜாத ஹை கரம் ஸம்யூ, மானை ஜனமாம் ஜாத**

ஒருவர் என்ன சொல்கிறார் என்ன செய்கிறார் என்பதில் எந்த முரண்பாடும் காணப்படக்கூடாது. உண்மையான சாதி உங்கள் செயல்களில் பிரதிபலிக்கிறது பிறப்பால் சொல்லும் சாதியில் இல்லை.

நாம் சொல்வதற்கும், செய்வதற்கும் எந்த வித்தியாசமும் இருக்கக்கூடாது

அவர் ஒருபோதும் சாதியையோ மதத்தையோ நம்பவில்லை. மேல்சாதி அல்லது கீழ் சாதி என பாகுபாடு காணவில்லை. எந்த சகோதரர்களின் திருமணங்களிலும் வரதட்சணை எடுக்கவில்லை ’

அவரது முழக்கம் “வரதட்சணை எடுப்பதை நிறுத்துங்கள். நீங்களாகவே முன்வந்து வரதட்சணை பெறுவதை தவிருங்கள்.

ஆனால் சமூகத்தின் தலைவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் பின்னர் அதன் விளைவுகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும்.

குருஜி உண்மையிலேயே ஒரு துறவி.

ஸ்ரீ பிரகாஷ் கோயங்கா,

மும்பை

---

**தொகுப்பாளர்கள் குறிப்பு:**

கோயங்காஜியின் ஐந்தாவது மகனான ஸ்ரீ பிரகாஷ்ஜி சிறுவயது முதலே ஒரு ஆளுமை மற்றும் கூர்மையான புத்தியை வெளிப்படுத்தினார்.

அவர் பிறந்த மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு (1952 இல்), கோயங்காஜி தனது முதல் விபாசனா தியானபயிற்சி நிகழ்ச்சியில் செப்டம்பர், 1955 இல் கலந்து கொண்டார்

மரியாதைக்குரிய ஸயாஜி ஊபாகின், மாதாஜியை ஆனாபானாவுக்கு அறிமுகப்படுத்தினார். சிறிது காலம் கழித்து அவர் முழு 10 நாள் தியானபயிற்சியில் பங்கேற்றார்.

அவரது இரண்டு சிறிய மகன்களுடன்(ஸ்ரீ பிரகாஷ் ஜெய் பிரகாஷ்).) மையத்திற்கு வர ஸயாஜி அவளுக்கு அனுமதி கொடுத்தார். மற்றும் அவள் தியானித்தில் அமரும் போது ஸயாஜி குழந்தைகளுடன் சிறிது நேரம் கழித்தார், அவர்களுக்கு கதைகளுடன் ஆனாபானா மற்றும் விபாசனா கற்பித்தார்

அவர்கள் பகலில் விளையாடுதல், தியானம் மற்றும் இரவில் மையத்தில் தூங்குவர். மற்றும் மையத்தில் இருந்து நேரடியாக காலையில் பள்ளிக்குச் செல்லுவார்கள்.

இந்த ஆரம்ப ஆண்டுகளில் இருந்தே தம்மா அவர்களுக்கு நல்ல மாறுதலை

ஏற்படுத்தியது. அவர்கள் வளர வளர தம்மாவின் வளர்ச்சியும் பெருகியது.

---

## அவரது மூத்த சகோதரருக்கு (பாபு பையா) எழுதிய கடிதங்களிலிருந்து சில பகுதிகள்,

மரியாதைக்குரிய கோயங்காஜி தம்மத்தைப் பரப்புவதற்கான மகத்தான பணியின் போது அவரது மாணவர்களுடன் அவரின் தினசரி தொடர்பு கொண்டு இருந்தார். அவர்களை பற்றிய சிறிய விவரங்களையும் அவர்களின் முன்னேற்றகளையும் பற்றி மிகவும் கவனமாக குறிப்பு வைத்து இருந்தார்

அது பற்றி அவரது மூத்த சகோதரருக்கு எழுதப்பட்ட கடிதங்களிலிருந்து கிடைத்த ஒரு சில துளிகளை நாம் இங்கு காணலாம். - ஆசிரியர்

---

முகாம்: ததேபள்ளிகுடம், டி.டி: 6.11.1969

வாழ்த்துக்கள் மரியாதைக்குரிய பாபு பையா (சகோதரா),

குடெமில் தியானப்பயிற்சி வெற்றிகரமாக முடிந்தது.

மரியாதைக்குரிய ஸயாஜி மற்றும் மா சயமா மற்றும் உங்களுடன் நான் மெட்டாவுடன் பகிர்ந்து கொள்கிறேன். இது தொடர்பாக நான் உங்களுக்கு ஒரு தந்தி அனுப்பியுள்ளேன்.

நவம்பர் 25 ஆம் தேதி வரை நான் இங்கேயே இருப்பேன் என நான் நினைத்துக் கொண்டிருந்தேன். இந்த நேரத்தை தனிமையில் சாதனா மற்றும் ஓய்வில் செலவிடுவது என அப்போது கருதியிருந்தேன்.

இப்போது அது சாத்தியமில்லை என்று தெரிகிறது.

குடும்ப மற்றும் வணிக தொடர்பான பொறுப்புகள் என்னை மிகவும் ஓய்வில்லாத சுறுசுறுப்பாக வைத்திருக்கும்.

அப்படியிருந்தாலும் நான் போதுமான அளவு ஓய்வெடுக்க முடியும் என நினைக்கிறேன். நான் பர்மாவுக்கு திரும்பிய பிறகு ஸயாஜி பாதம் அருகில் அமர்ந்து தியானம் செய்ய வேண்டும்.

---

முகாம்: ததேபல்லிகுடெம், நவம்பர் 10, 1969

மரியாதைக்குரிய பாபு பாபு பையா (சகோதரா), உங்கள் சரணங்களுக்கு

என் வணக்கங்கள்,

நேற்று இரவு இங்கே தீபாவளி.

மாலை 6.30 மணிக்கு குடும்பத்துடன் அமர்ந்து இருந்தோம். இன்று ரங்கூனில் உள்ள எங்கள் விருந்தினர் மாளிகை தியான மண்டபமாக மாற்றப்பட்ட நாள்.

மரியாதைக்குரியவர் ஸயாஜி, மா ஸயமா மற்றும் பிற தியானிப்பவர்கள் வீட்டிற்கு வந்திருக்க வேண்டும். இருவரும் ஆரோக்கியமாக இருப்பதாக நான் நம்புகிறேன்.

நேற்று இரவு நான் மெட்டா விஹாராவில் இங்கே இரவு வரை உட்கார்ந்து இருந்ததால் மிகவும் நன்மை பயக்கும் விளைவுகளுடன் நல்லதாக மாறியது. மனம் சுத்திகரிக்கப்பட்டது. நிச்சயமாக இந்த புனிதத்தின் தாக்கம்

மெட்டா யாருக்கு வழங்கப்பட்டதோ அவரும் அதை உணர்ந்து இருப்பார். என் இதயம் இரக்க மகிழ்ச்சியால் நிரம்பியது.

---

முகாம்: ததேபல்லிகுடெம், நவம்பர் 15, 1969

மரியாதைக்குரிய பாபுபையா வாழ்த்துக்கள்!

உங்கள் சில கடிதங்களுக்கு என்னால் பதிலளிக்க முடியவில்லை

என்பதால் மன்னிக்கவும். அக்டோபர் 26 ஆம் தேதி தண்டெகோ (பர்மிய தீபாவளி) நாள். அன்று அதிகாலை 4.00 முதல் 5.00 மணி வரை முகாமில் கலந்து கொள்ளும் சாதர்களுடன் நான் தியானித்தில் அமர்தேன் என்று ஸயாஜி யிடம் சொல்லுங்கள்.

அந்த மாலை சொற்பொழிவின் போது நான் தீபாவளி திருநாள் - இந்த விளக்குகள் திருவிழா- பற்றி சிறிது விளக்கினேன்.

இன்னும் ஒரு விஷயம். இந்த முகாம் போது எனது சொற்பொழிவுகள் தினமும் பதிவு செய்யப்பட்டது.

இந்த முகாமின் தியானிப்பாளர்களாக பங்கேற்றவர்கள் நன்கு படித்த பின்னணியில் இருந்து வந்தவர்கள் அல்ல. சொற்பொழிவுகளும் கூட அவர்களுக்கு புரியும் வண்ணம் நிகழ்ந்தது.

எனவே சில மாற்றங்களைச் செய்து இறுதி நகல் நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் அதை ஸயாஜியிடம் காட்டவும். நான் தம்மம் மாறாக எதுவும் பேசவில்லை என்பதை உறுதிப்படுத்த கொள்ள விரும்புகிறேன்.

ஆனால் இது நேரம் எடுப்பதால் கடந்த நான்கு முகாம்களின் அறிக்கை இன்னும் என்னால் வெளியிட இயலவில்லை என்று உணர்கிறேன். இதன் விளைவாக எத்தனை விவரங்கள் இழக்கப்பட இருக்கும்.

எல்லாவற்றிற்கும் நிறைய நேரம் தேவைப்படுகிறது. நேரம் பற்றாக்குறை என்னை தொந்தரவு செய்கிறது....



(கோயங்காஜியுடன் ததேபல்லிகுடெமில் பயின்ற ஆண் மாணவர்கள்)

குடெமில் உள்ள பள்ளியில் நடத்தப்பட்ட தியானப்பயிற்சி பற்றிய அறிக்கையை நேரம் பற்றாக்குறை காரணமாக எப்போது என்னால் எழுத இயலும் என்று தெரியவில்லை.

ஆனால் சுருக்கமாக கூற வேண்டுமானால் இந்த பாடத்திட்டத்தில் 9 ஆண்களும் 11 பெண்களும் அமர்ந்தனர். இவர்களில் 6 ஆண் உறுப்பினர்கள் எங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்.

மற்றவர்களில் ஒரு சாது வந்து இருந்தார். வாரணாசியைச் சேர்ந்த ராம் சாகர் ஆசிரமத்தில் இருந்து வந்த அறிஞர். அவர் தன்னை போதாசிரம் என கூறிக்கொண்டார். கல்கத்தாவில் நடந்த பயிற்சியில் கலந்து கொண்ட பிறகு, அவர் எங்களுடன் இங்கே வந்தார். இப்போது எதிர்கால பயிற்சியில் பங்கேற்க ஆர்வமாக உள்ளார்.

அவர் முதுகலை பட்டதாரி எம்.ஏ., எல்.எல்.பி. மற்றும் பி.எட். மற்றும் சமஸ்கிருதத்தின் கற்றறிந்த அறிஞர். அவர் துறவியாகும் முன் வாரணாசியில் ஒரு பள்ளியில் முதல்வராக பின்னர் ஒரு கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி இருந்தார்.

## வாரணாசியில் இருந்து வந்த ஒரு துறவி

புத்தசாதனா என்ன என்பதை அறிய ஆர்வமுடன் அனைத்தையும் துறந்த துறவி சாரநாத் (வாரணாசி) முகாமில் சேர்ந்தார்.

அவர் எண்ணற்ற சாதனாப் பயிற்சி செய்தவர். ஹத யோகா, தந்திரம், குண்டலினி யோகா தேர்ச்சி பெற்றவர். மற்றும் பல ஆண்டுகளுக்குப் தபஸ், செய்தவர். அவர் வேறு எந்த ஊடகம் மூலமாகவும் இந்த அளவு செறிவு பெறவில்லை என்று அறிவித்தார். இந்த தியான பயிற்சியில் ஆழமாக ஈர்க்கப்பட்டார். அவர் இங்கு சாதித்தார்.

அவர் பிச்சையிலிருந்து பயணத்திற்காக பணம் சேகரித்தார்.

கல்கத்தாவுக்குச் சென்று முகாமில் சேர்ந்தார். அங்கே அவர் புனித விபாசனாவில் ஆழமாக ஈடுபட்டு உடலின் ஒவ்வொரு அணுவிலும் ஆழ்ந்த மகிழ்ச்சி மற்றும் அவர் மன விழிப்பு நிலயை அனுபவித்தார்.

மற்ற முகாம்களுக்கு எங்களுடன் வர அனுமதி கோரத் தொடங்கினார். பணம் சிலவற்றை சேமித்து குடெம் வரை அவரது பயண செலவுகளை ஏற்பாடு செய்தேன். அவரின் முகாம் செலவுகளை அன்பான ராதே ஏற்றுக்கொண்டார்

மெட்ராஸில் ஒரு மாதத்திற்க்கு (சென்னை) பின்னர் முகாம் நடைபெற உள்ளது. நான் அவரை சென்னையின் பயண செலவுக்காக இந்த மாதத்தை நன்கொடை (பிச்சை) பெறுவதில் ஈடுபடுமாறு அறிவுறுத்தினேன் பின்னர் டிசம்பர் 4 முதல் மெட்ராஸுக்கு வருமாறு கூறினேன். அவர் இங்குள்ள முகாமில் பெரும் முன்னேற்றம் அடைந்தார்.

எங்கள் சகோதரரின் கால்நடை தீவன தொழிற்சாலையைச் சேர்ந்த இரண்டு தொழிலாளர்கள், ராதேயின் கீழ் பணிபுரிபவர்கள் முகாமில் பங்கேற்றனர். மற்றும் முகாமில் பயன் அடைந்தனர். தொழிற்சாலையைச் சேர்ந்த மற்ற தொழிலாளர்களும் சேர ஆர்வமாக இருந்தனர்.

ஆனால் ஒரு பிரச்சனை என்னவென்றால் அவர்களின் 10 நாட்கள் சம்பளம் இழக்க வேண்டியிருக்கும். இது மாத சம்பளம் பெறும் நபருக்கு நிச்சயமாக கடினமானதே.

எங்கள் சாதனா முகாம்கள் குறித்து நான் குறிப்பாக கவலைப்படுகிறேன். சமூகத்தின் உயர் பிரிவினருக்காக மட்டும் என இருக்கக்கூடாது

அனைத்து பிரிவினரும் பயன் அடைவதற்க்கான வழிகளை நாம் மேற்கொள்ள வேண்டும் அதன் முலம் நாம் அனைத்து பிரிவினருக்கும் சமத்துவம் கொடுக்க முடியும். குறைந்தபட்ச செலவினங்களுக்குள் முகாம்களை ஏற்பாடு செய்யவேண்டும்,

அப்போது தான் புத்தரின் அழைப்பு “பகுஜன் ஹிட்டாயா, பஹுஜன் சுகயா” என்பதை உண்மையாக்கலாம்.

இந்த முகாமில் 11 பெண்கள் பங்கேற்றனர். அவர்களில் பெரும்பாலோர் கேடியா குடும்பத்தினர். இருவர் பீமாவரத்திலிருந்து வந்தவர்கள் மற்றும் எலுருவிலிருந்து இரண்டு பேர். பின்னர் மேலும் 3 பெண்கள் ராஜஸ்தான் இருந்து வந்தனர். இவ்வாறு 20 சாதுக்களின் குழு உள்ளூர் ஆரம்ப பள்ளியில் முகாமுக்கு அமர்ந்தது.

இந்த பெண்களில் ஒருவர், காது கேளாதவர். நான் அவளுக்கு விபாசனா கொடுக்க முடியாததால் நன்றாக முன்னேற முடியவில்லை,அவளுக்கு ஆனாபானாவை மட்டுமே வழங்க இயன்றது.



**சரத பிக்கவே சாரிகம் பஹூஜன ஹிதாய பஹூஜன ஸூகாய**

மற்ற இரண்டு பேர் மிகவும் வயதான பெண்கள் விபாசனாவில் ஆழமாக செல்ல முடியவில்லை. மற்ற பெண்கள் மிகவும் திருப்தி அடைந்தனர். ஆக அனைவரும் ஆழ்ந்து ஈர்க்கப்பட்டனர்.

மற்றும் குடெமில் மேலும் ஒரு முகாம் நான் பர்மாவுக்குத் திரும்பும் முன் ஏற்பாடு செய்யுமாறு ஆவலுடன் கோரிக்கையிட்டனர்.

இன்னும் 3 முதல் 4 மாதங்களுக்கு இந்தியாவில் தங்குவதற்கு நீங்கள் எனக்கு அனுமதி அளித்து இருப்பது நல்லது. இந்த நேரத்தில் நான் மற்றொரு சுற்று தம்ம பயிற்சி முகாம்களை மேற்கொள்ளுவேன்.

மற்றும் அந்த தகுதிகளின் சக்தியை மற்றும் நிலையான

மெட்டா-பாவனாவுடன் நான் தொடர்ந்து குடும்ப உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொள்வேன். எங்கள் குடும்பத்தில் என்னுடன் வாழ்நாள் முழுவதும் பயணம்

செய்தவர்கள் தூக்கத்திலிருந்து எழுந்து தம்மத்தின் உண்மையான முகம் அடையாளம் காண வேண்டும் என விரும்புகிறேன்.

இந்தியா வழியாக பயணம் செய்த பிறகு இந்த பாதையில் ஏராளமான மக்கள் தம்ம பாதையில் நடக்க முடியும் என நான் எதிர்பார்க்கிறேன்.

அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்காக நாம் பொறுமையாக காத்திருப்போம். தம்ம படிப்புகளின் இரண்டாவது சுற்று என்ன விளைவை ஏற்படுத்தும். என பொறுத்து இருந்து பார்க்கலாம்.

அது இன்னும் எந்த நல்ல முடிவையும் காட்டவில்லை என்றால் தேவைப்பட்டால் ஆண்டுகள் தோரும் தொடர்ந்து மெட்டா-பாவனாவுடன், நாங்கள் பொறுமையாக காத்திருப்போம்

எனது ஓய்வு நேரத்தைப் பொறுத்தவரை குடும்பப் பிரச்சினை, வணிக தொடர்பான விஷயங்கள் அதற்கான பிரச்சனைகளை எதிர்கொள்ளும் நேரம் என்னை என் சொந்த சாதனைகளுக்கு அமரவிடாமல் தடுக்கின்றன. ஆனால் மெட்ராஸுக்குச் செல்வதற்கு முன், நான் நிச்சயமாக எனது சொந்த சாதனைகளுக்கு அதிகபட்சம் 3 நாட்கள் சயகியின் அறிவுறுத்தல்களின்படி அமைதியாக இருக்க நேரம் ஒதுக்குவேன்.

சில சமயங்களில் தம்ம பற்றிய விளக்கத்தை தியான முகாமில் எடுத்து கூற வேண்டி இருக்கலாம். மற்ற நேரத்தை என் சொந்த சாதனைகளுக்கு ஒதுக்குவேன்.

கல்கத்தாவிலிருந்து வரும் தியானிகள் மிகவும் திருப்தி அடைந்தனர். மற்றொரு முகாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர்.

உண்மையில் கல்கத்தா மற்றும் குடெமில் ஒழுங்கமைக்க பட்ட முகாம்கள் ஏற்பாடு செய்த பெருமை  சகோதரர் சவுத்தமலுக்கே உரியது. நிச்சயமாக பலரும் அவரால் ஊக்குவிக்கபட்டு முகாம்களில் பங்கேற்றனர்.

இந்தியாவில் உள்ள அனைத்து முகாம்கள் ஏற்பாடு செய்வதன் முலம் குறிப்பாக இந்த இரண்டு முகாம்களின் ஏற்பாடு செய்ததன் முலம் அவர்

நிச்சயமாக பரமிஸ் சம்பாதித்துள்ளார். இது உண்மை. இது பற்றி நான் அவருக்கும் எழுதுவேன்.

தலாய் லாமா ஒரு தியான பயிற்சி முகாமில் அமர்வார் என எதிர்பார்க்க இயலாது. ஆனால் அவர் தம் மக்களை அனுப்புவார் என்பது உறுதி.

லடாக்கி லாமாஸ் தலைவர் , குஷாக் பாகுலா நிச்சயமாக தியான பயிற்சி முகாமில் பங்கேற்க ஆர்வமாக உள்ளார். டெல்லி முகாமில் அவர் பங்கேற்கிறாரா என்று பார்ப்போம்.

## பர்மிய துறவிகளுக்கான அங்கி

நான்கு ஜோடி துறவியின் ஆடைகள் பெறப்பட்டன. ஒரு ஜோடி ராஜ்கீரில் உள்ள ஒரு பர்மிய துறவி ஜெயந்திற்கு அனுப்பப்பட்டது. பதிலுக்கு அவர் எழுதிய கடிதம் எனக்கு கருணையுடன் கூடிய மகிழ்ச்சியை அளித்தது.

கடந்த ஆறு ஆண்டுகளில் தனக்கு ஒரு அங்கி கூட கிடைக்கவில்லை என்று எழுதியிருந்தார். இந்த பர்மிய அங்கி மூலம் இன்று அவர் மிகவும் திருப்தி அடைந்தார். நான் அவரை விட திருப்தி அடைந்தேன்.

ராஜ்கீரில் இந்த எளிய துறவி ஒரு கிழிந்திருந்த அங்கி அணிந்திருந்ததை நான் கவனித்தேன். ராஜ்கீரில் உள்ள அவரது ஆசிரமத்தைச் எங்களுக்கு சுற்றி காண்பிக்கும் போது அவரது அங்கி பின்னால் கிழிந்திருப்பதை மறைக்க தனது அங்கியை அவர் மீண்டும் மீண்டும் அதை இழுத்துக் கொள்ள முயன்றார். அதை நான் கவனித்தேன்.

அது பின் வரும் நாட்களில் என் மனதில் வேதனையை அளித்தது. அவரது அங்கியைப் போலவே, என் இதயத்தின் ஒரு மூலையும் துண்டிக்கப்பட்டது. உண்மையில் இந்தியாவில் பர்மிய துறவிகள் பரிதாபகரமான சூழ்நிலைகளுக்கு ஆளாகின்றனர்.

பர்மாவிலிருந்து பயணிகள் இங்கு வர முடியாது, யாரும் இங்கே அவர்களுக்கு தானம் கொடுப்பதில்லை. இங்கு வசிக்கும் பர்மியர்களின் கால எல்லை காலாவதியானால், அவர்கள் தங்கள் நாடுகளுக்கு திரும்ப முடியாது.

பர்மாவிலிருந்து திருப்பி அனுப்பப்பட்ட இந்தியர்கள் (அரசியல் காரணங்கள்) பர்மாவுக்கு நன்றியுடன் மற்றும் பர்மாவின் மேல் மென்மை உணர்வைத் தக்க வைத்துக்கொள்பவர்கள். புத்தரின் போதனைகள் மூலம் பயனடைந்தவர்கள் இந்த மகன்களை கவனித்துக் கொள்ள வேண்டும். இந்த புத்த துறவிகள் தங்களை ஒரு விசித்திரமான உதவியற்ற நிலையில் காண்கிறார்கள். அனைத்தையும் துறந்த அவர்கள் வாழ்நாளில் எதையும் கேட்க தயங்குகிறார்கள்



(1967 யாங்கோனில் தானா கொடுப்பது)

கிழிந்த உடையணிந்த துறவிக்காக நீங்கள் அனுப்பிய அங்கியின் இந்த தானா சந்தேகத்திற்கு இடமின்றி உங்களுக்கு எண்ணற்ற தகுதிகளை வழங்கும்.

நான் எப்போது அவரது கடிதத்தைப் படித்தாலும், அந்த புதிய அங்கியை அவர் அணிந்திருப்பதை கற்பனை செய்து பார்த்து என் இதயம் மகிழ்ச்சியுடன் நிரப்புகிறது. அதே மகிழ்ச்சியை நீங்கள் உணரட்டும்!

இந்த அங்கியின் தானா எண்ணற்ற நல்லெண்ணத்திற்கு காரணமாகிறது.

உங்களுடன் எங்கள் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் பேரின்பம் அளிக்கட்டும். என் இதயம் இந்த நல்ல வாழ்த்துகளுடன் உருகும்.

உண்மையிலேயே இந்த தானா மூன்று வழிகளில் தூய்மையானது-

கொடுப்பதற்கு முன் இதயம் மகிழ்ச்சியில் மூழ்கி, அதை அனுப்பும் போது, இதயம் மகிழ்ச்சியுடன் நடுங்கியது, இப்போது அதை அனுப்பியவுடன் இந்த தானாவின் நினைவில் இதயம் உண்மையிலேயே உருகும். அத்தகைய சுத்திகரிக்கப்பட்ட தானா மகத்தான தகுதிகளைக் கொண்டுள்ளது மற்றும் ஏராளமான மகிழ்ச்சியை தொடர்ந்து வளரச்செய்யும்.

நிதி திரட்டும் சிக்கல்கள் தவிர தானத்திற்க்காக அங்கிகளை ஏற்பாடு செய்வது இங்கு நிச்சயமாக ஒரு கடினமான பணியாகும். ஒருவேளை இச் சிக்கல்கள் விரைவில் தீர்க்கப்படலாம்.

எங்கள் உண்மையுள்ள குடும்ப உறுப்பினர்களிடமிருந்து தானாவை சேகரிக்க நான் தீர்மானித்தேன். எங்கள் மகள் விமலாவின் திருமணம் சந்தர்ப்பத்தில் இந்தியாவில் செய்யப்பட்ட அங்கி ஆடைகளை 15 முதல் 20 பர்மிய துறவிகளுக்கு அடுத்த ஹோலி திருவிழாக்கு முன் இந்தியாவில் வழங்குவதாக உள்ளேன்

உங்கள் தம்பி,

சத்ய நாராயண் கோயங்கா

தொடர்: பாபு பையாவுக்கு எழுதிய கடிதங்களின் பகுதிகள்

## தம்மா தோஹா

**கரும் வந்தனா ஸங்க கீ, ஸாதர் கரும் ப்ராணம்**

**ஜகே ப்ரேணா முக்தி கீ மிலே ஸுகத பரிணாம்.**

சங்காவுக்கு கைகளை கூப்பி மிகுந்த மரியாதையுடன் நான் வணங்குகிறேன்;

இது மகிழ்ச்சியான முடிவுகளைத் தந்து, சுதந்திரத்தை நோக்கி என்னை ஊக்குவிக்கட்டும்

---

**கரும் வந்தனா ஸங்க கீ ஜோ ஜய தர்ம ஜகாய்**

**ஜாதி வர்ண் கே பேத பின் ஸந்தோங் கா ஸமுதாய்**

உலகில் தம்மா உருவாகிய சங்காவுக்கு நான் வணங்குகிறேன்,

மதம் அல்லது சாதி பாகுபாடு இல்லாதது புனிதர்களின் கூட்டம்

---

**ஷாந்த சித்த ஹீஸந்த ஹை கிஸீ ஜாதி கா ஹோய்**

**சலே தர்ம  கே பந்த பர் ஸதா பூஜ்ய ஹை ஸோய்**

அமைதியான மனதுடன் உள்ள ஒருவர் எந்த சாதியைச் சேர்ந்தவரானாலும்

அவரே புனிதர். அவர் எப்போதும் தம்மத்தின் பாதையில் நடப்பவர்.

அவரே மரியாதைக்கு தகுதியானவர்.

**ஹிந்தூ முஸ்ஸிம் பௌத்த ஸிக் ஜைன் இஸாயி ஹோய்**

**ஜிஸகா மன் நிர்மல் ஹூவா ஸந்த பூஜ்ய ஹை ஸோய்**

யாருடைய இதயம் சுத்திகரிக்கப்பட்டுள்ளதோ அவர் இந்து, முஸ்லீம், புத்த,

சீக்கிய, சமண அல்லது கிறிஸ்தவராக இருந்தாலும் அந்த புனிதர்

மரியாதைக்கு தகுதியானவர்.

---